**செய்தி வெளியீடு எண்.464** **நாள் 23.11.2006**

**அனைத்து சாதியினரையும் அர்ச்சகர்களாக நியமித்திட அரசுக்குப் பரிந்துரைகள்**

**முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் குழு அறிக்கை வழங்கியது**

இந்துக்களில் உரிய பயிற்சியும் தகுதிகளும் உள்ள அனைத்துச் சாதியினரும் தமிழ்நாட்டில் உள்ள இந்து சமய திருக்கோயில்களில் அர்ச்சகராகலாம் என்று 23.5.2006 அன்று தமிழக அரசு ஆணையிட்டது. அந்த ஆணையைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காக, அர்ச்சகர்களுக்குரிய பயிற்சிகள் அளித்திட பாடத்திட்டம், பயிற்சியாளர்களுக்கான அடிப்படைக் கல்வித் தகுதி, வயது, பயிற்சிக் கால வரையறை, எத்தனை இடங்களில் பயிற்சி நிலையங்களை அமைப்பது என்பன போன்ற பொருட்களின்மீது கொள்கை ரீதியாக முடிவுகள் மேற்கொள்ள அரசுக்கு ஆலோசனைகள் வழங்கும்பொருட்டு ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு.ஏ.கே.ராஜன் அவர்கள் தலைமையில் 10.6.2006 அன்று அமைக்கப்பட்ட உயர்நிலைக்குழு இன்று (23.11.2006) முதலமைச்சர் கலைஞர் அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்தது. அப்பொழுது குழுவின் தலைவர் நீதியரசர் திரு.ஏ.கே.ராஜன் அவர்கள், தமது குழு விரிவாக ஆராய்ந்து உருவாக்கியுள்ள பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் வழங்கினார். அவ்வமயம் குழு உறுப்பினர்களான தவத்திரு குன்றக்குடி தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக அடிகளார், பேரூர் சீர்வளர்சீர் சாந்தலிங்க ராமசாமி அடிகளார், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் திரு.த.பிச்சாண்டி,இ.ஆ.ப., ஆகியோரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன், தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை செயலாளர் திரு.ஆர்.கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப., ஆகியோரும் உடனிருந்தனர்.

வெளியீடு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை 9